**(2024-25-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** **24 PTM 312**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2025

எம். ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

மூன்றாம் பருவம் நேரம் : 3 மணி

## தமிழகத் தொல்லியல்

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(K2)**

1. இந்தியத் தொல்லியலின் தந்தை என அழைக்கப்பட்டவர் யார்?
   அ) ராபர்ட் ப்ரூஸ் ஃபுட் ஆ) ஹென்றி ப்ரூஸ் ஃபுட்
   இ) பீட்டர் பெர்சிவல் ஈ) தாமஸ் ஓல்ட் ஹாம்
2. விவசாயத்தின் முன்னோடிகள் யார்?
   அ) கிரேக்கர்கள் ஆ) தமிழர்கள் இ) எகிப்தியர்கள் ஈ) ரோமானியர்கள்
3. ‘தேறல்’ என்ற சொல்லின் பொருள் யாது?
   அ) மது ஆ) தேன் இ) பால் ஈ) பழரசம்
4. பசித்தோருக்கு சோறு பொங்கி கஞ்சி அளிக்கும் அறவுணவுச்சாலைகள் இருந்தன என்று எந்த நூல் குறிப்பிடுகின்றது?
   அ) நெடுநல்வாடை ஆ) மதுரைக்காஞ்சி இ) பட்டினப்பாலை ஈ) குறிஞ்சிப்பாட்டு
5. செம்பியன் கண்டியூரில் கிடைத்த கைக்கோடரியில் எத்தனைக் குறியீடுகள் காணப்பட்டன?
   அ) இரண்டு ஆ) நான்கு இ) மூன்று ஈ) ஒன்று

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. **(K2)**

6. நீலகிரியில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் எவை, அவற்றை வாங்கிச் சென்றவர்கள் யார்?
7. விவசாயத்தின் முன்னோடிகளாக குறிப்பிடப்படுபவரின் தலைவன் யார்?
8. ‘பொதுகே ‘ என்ற தென்னிந்திய கிழக்குக் கடற்கரைத் துறைமுகம் நகர் பற்றிய குறிப்பு எந்த நூலில் காணப்படுகிறது ? அது எந்த நகரை குறிப்பிடுகின்றது?
9. தமிழகத்தின் முதல் தமிழ் வீரன் யார், அவரைப் பற்றிய குறிப்பு எங்கு உள்ளது?
10. தேனூர் தங்கப்பட்டைகளில் பொறிக்கப்பட்ட பெயரினைக் குறிப்பிடுக.

### பகுதி – ஆ (5 X 5 = 25 மதிப்பெண்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. **(K3)**

11. அ) மனித நாகரீகத்தின் தாய்மடி என்று ஆப்பிரிக்க கண்டம் அழைக்கப்படுவது ஏன்?
    (அல்லது)
    ஆ) ஹோமோ எரக்டஸ் மனிதர்கள் குறித்து விளக்குக.
12. அ) சூது பவளம் குறித்து குறிப்பு வரைக.
    (அல்லது)
    ஆ) டென்டிரோ குரோனாலஜி பற்றி விளக்குக.

(த.பி.பா.)

*ETHICAL PAPER*

13. அ) பையம்பள்ளியில் இரும்புக் காலத்துக்கும், புதிய கற்காலத்திற்கும் உள்ள தொடர்பு குறித்து சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

ஆ) தொழில்சார் நகரமாகக் கொடுமணல் திகழ்ந்திருப்பதை சான்றுடன் நிறுவுக.

14. அ) 'பொறிவரை' ஓவியங்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

ஆ) 'ஓடை லேட்டரைட் குழந்தை' பற்றி ஆராய்க.

15. அ) பெண் தெய்வ வழிபாடு குறித்து பட்டணம் அகழ்வாய்வு வழி நிறுவுக.

(அல்லது)

ஆ) கீழடி அகழ்வாய்வில் கிடைத்த பொருட்களை பட்டியலிட்டு விளக்குக.

## பகுதி – இ ( **5 X 8 = 40** மதிப்பெண்கள் )

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.

**(K4 (Or) K5)**

16. அ) நீலகிரி அகழ்வாய்வின் மூலம் தமிழருக்கும் ரோமானியர், சுமேரியருக்குமிடையில் இருந்த தொடர்பு குறித்து விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழரின் பண்பாட்டு நிலைகளையும், நாகரீக வளர்ச்சியையும் அகழ்வாய்வுகளின் மூலம் நிறுவுக.

17. அ) ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் குறிப்பிடப்பட்டுள்ள வளமைப் பெண்- கண்ணாடி- நாய் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) தமிழகத்தில் ஆதி காலத்தில் குதிரைகள் பயன்பாடு இருந்து வந்துள்ளது குறித்து வெள்ளலூர் அகழ்வாய்வு வழி நிறுவுக.

18. அ) புகார் நகர அகழ்வாய்வின் வழி நடைபெற்ற ஏற்றுமதி இறக்குமதி குறித்து தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) அரிக்கமேடு அகழ்வாய்வின் வழி கிடைத்த பொருட்களை கால வரிசையில் பட்டியலிட்டு நிறுவுக.

19. அ) 'பிம்பேத்கா மற்றும் பொறிவரை' ஓவியங்களில் உள்ள ஒற்றுமை குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) நடுகல் பற்றிய குறிப்பினை புலிமான் கோம்பை வழி விவரித்து எழுதுக.

20. அ) செம்பியன் கண்டியூரில் கண்டறியப்பட்ட கைகோடரி குறித்து தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) கீழடி அகழ்வாய்வின் மூலம் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் நிலையினை தொகுத்துரைக்க.